காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 2

(வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தொகுதி -1)

அட்டைப்படம்

முன் அட்டை : வரதராஜப் பெருமாள் கோயில்
மேற்கு வாயிற் கோபுரம் (உட்புறம்)

பின் அட்டை : வரதராஜப் பெருமாள் கோயில்
பொதுத் தோற்றம்

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 2

(வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தொகுதி -1)

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

இரா. சிவானந்தம்

கி. சு. சம்பத்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Kanchipuram Mavattak Kalvettukal Vol.2**
General Editor	:	Principal Secretary and Commissinor
Editors	:	R. Sivanantham & K.S. Sampth
Copyright	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	EPIGRAPHY
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	236
Year	:	2011
No. of Copies	:	1000
Type Point	:	12
No. of Pages	:	373
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	The Chennai Printer's Industrial Co-op. Society Ltd. 6, Pycrofts Road, Triplicane, Chennai-5
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 118/-

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை-600 008.
நாள்:09.02.2011

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டிலிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து பதிப்பித்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 25,000 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு, இவற்றில் இதுவரை 23,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் 2004- ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2010 வரை சுமார் 14,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை படியெடுக்கப்பட்ட 23,500 கல்வெட்டுகளில் 5600 கல்வெட்டுகள் 39 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I என்னும் நூல் ஏற்கனவே இத்துறையால் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-II என்னும் இந்நூலினை வெளியிட திட்டமிடப்பட்டது. மத்திய தொல்லியல் துறையால் 1919-ஆம் படியெடுத்துப் படிக்கப்பட்ட பிரதிகளை கொடுத்துதவிய புதுதில்லி, மத்திய அரசு தொல்லியல் துறை பொது இயக்குநர் முனைவர் கௌதம் சென் குப்தா அவர்களுக்கும், மைசூர் கல்வெட்டுப் பிரிவு இயக்குநர் முனைவர் டி. எஸ். இரவிசங்கர், கல்வெட்டு துணைக் கண்காணிப்பாளர் முனைவர் சு. சுவாமிநாதன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இக்கல்வெட்டுகளை படித்து பதிப்பித்து நூலாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு இரா. சிவானந்தம், திரு கி.சு. சம்பத் ஆகியோருக்கு எனது பாராட்டுகள், இந்நூலினை D.T.P. செய்த இத்துறை அச்சுப்பிரிவு பணியாளர்கள் திருமதி கோ. கீதா, திருமதி தே. சத்தியவதி, திருமதி ச. சரஸ்வதி, திரு மு. சக்திவேல், திருமதி கு. கோகிலா ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

2010-2011- ஆம் நிதியாண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் இந்நூலினை வெளியிட அனுமதியளித்து, நிதியுதவி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும் பெரு முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வரலாற்று அடிப்படைச் சான்றுகளை ஆய்வாளர்களும், ஆர்வாளர்களும் பயன்படுத்தி தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளை உலகளவில் எடுத்துரைக்க வேண்டும் என்பதே என் ஆவல்.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

முன்னுரை

காஞ்சிபுரம் 12°50‘ வட அட்சரேகையிலும் 79°40’ கிழக்கு தீர்க்க ரேகையிலும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 250மீ உயரத்தில் உள்ளது. சென்னையிலிருந்து 75 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள காஞ்சிபுரம் நகரம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகரமாகவும் திகழ்கிறது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் தென்னிந்திய அரசியல் மற்றும் சமுதாய வரலாற்றில் முக்கிய நகரமாக திகழ்ந்து வருகின்றது.

காஞ்சியின் வரலாறு சங்ககாலம் தொட்டு சிறப்புற்று விளங்கி வருகின்றது. சங்க காலத்தை அடுத்து தென்னிந்தியாவின் பழமையான அரசான பல்லவர்களின் தலைநகரமாக விளங்கியது. காஞ்சியில் வழிபாட்டு முறையினையை வைத்து சிவ காஞ்சி, வைணவ காஞ்சி, சமணக் காஞ்சி என்றழைப்பர். வேகவதி மற்றும் பாலாறு ஆகிய இரு ஆறுகளுக்கிடையே சிவ காஞ்சியும், வைணவ காஞ்சியும் அமைந்துள்ளன. அதே போல் சமணக் காஞ்சி (ஜினக் காஞ்சி) வேகவதி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம், தொண்டை மண்டலத்தின் நிர்வாகப் பிரிவுத் தலைமையிடமாகத் திகழ்ந்ததை சங்க இலக்கிய நூல்கள் மற்றும் இப்பகுதி கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்நகரம் கச்சி, கச்சிப்பேடு, காஞ்சி, காஞ்சிநகர், காஞ்சி மாநகர் என்ற பல்வேறு பெயர்களால் சுட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கிய நூல்கள் இந்நகரினை ‘கச்சி’ என்றழைப்பதே மிகப் பழமையானதாகும். இதன் பின்னர் ‘காஞ்சி’ என்ற பெயர் பெற்றது. ‘காஞ்சி’ மரம் சூழ்ந்த இடமாதலால் இப்பெயர் பெற்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வைணவ காஞ்சிப் பகுதி சின்னகாஞ்சிபுரம் என்றும், சிவ காஞ்சி பெரிய காஞ்சிபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. அருளாளப் பெருமாள் கோயில் அமைந்துள்ள வைணவக் காஞ்சி, காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாகவும், இப்பகுதியினை அத்தியூர் மற்றும் திருஅத்தியூர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டதை இப்பகுதி கல்வெட்டுகள் பகர்கின்றன. ‘அத்தி’ மரங்கள் நிறைந்திருந்த பகுதி என்பதால் ‘அத்தியூர்’ என்ற பெயர் பெற்றது. அத்தியூரில் உள்ள குன்றுப் பகுதியில் தான் அருளாளப் பெருமாள் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே ‘அத்திகிரி’ என்றழைக்கப்பட்ட இவ்வூர் ‘ஹஸ்திகிரி’ ‘ஹஸ்திபுர’ என்று வடமொழிப்படுத்தப்பட்டது. ‘யானை மலை’ ‘யானை நகரம்’ என்பது இவற்றின் பொருள்களாகும். இக்கோயில் இறைவனை ‘அத்தியூர் ஆழ்வார்’|, ‘அத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாள், ‘அத்திவரதர்’ என்ற பெயர்களால் அழைக்கப்பட்டதை இக்கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இக்கோயில் இறைவனைப் பற்றிய முதல் குறிப்பு பல்லவர் காலத்தில் வாழ்ந்த முதல் மூன்று ஆழ்வார்களான பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய இம்மூவரில் பூதத்தாழ்வார் பாடிய 'திருவந்தாதி'யில் காணப்படுகிறது. எனவே பல்லவர் காலத்தில் 'அத்தியூர் அருளாளப் பெருமாள்' கோயில் இருந்துள்ளதை அறிய முடிகிறது. அக்கோயில் எவ்வகையில் அமைக்கப்பட்டிருந்ததை அறிந்து கொள்ள இயலவில்லை ஏனெனில் அக்கால கட்டப்பகுதிகள் இங்கு காணப்படவில்லை.

ஆனால் பல்லவர் கால கட்டட அமைதியுடன் கூடிய மணற்கல்லால் ஆன இரு தூண்கள் குளத்தின் உள்ளிருந்தும் சுதர்சன சன்னதியின் அருகிலிந்தும் கண்டறியப்பட்டன. இத்தூண்கள் மட்டுமே பல்லவர்கால கோயிலின் எச்சங்களாகக் கிடைக்கின்றன.

இக்கோயிலில் மொத்தம் 360 கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் காலாத்தால் முந்தையது முதலாம் இராசாதிராசனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1050) கல்வெட்டாகும். இக்கோயில் அருளாளப்பெருமாள் கோயில் கருவறை, அர்த்தமண்டபம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு சோழர் காலக் கட்டடக் கலைப் பாணியில் உள்ளது. எனவே இக்கோயில் கி.பி. 1050- ஆம் ஆண்டுக்கு முன்னர் சோழர் காலத்தில் இக்கோயில் கருவறை அர்த்தமண்டபம் ஆகியவை முதலில் கருங்கற்களால் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அதன் பின்னர் ஏனைய திருச்சுற்றுகள், சன்னதிகள், மண்டபங்கள் விரிவாக்கம் அடைந்தன.

இக்கோயிலில் உள்ள 360 கல்வெட்டுகளில் விஜய நகரர் காலத்துக்கு முந்தைய காலக் கல்வெட்டுகள் 190 கல்வெட்டுகள் மட்டுமே இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. மீதியுள்ள 170 கல்வெட்டுகள் காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -III (காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தொகுதி-II) என்னும் நூலில் இடம் பெறும். இத்தொகுதியில் சோழர், பாண்டியர், ஹொய்சளர், காகதீயர் போன்ற அரசுகளின் கல்வெட்டுகளும், இவ்வரசுகளின் காலத்திலிருந்த சிற்றரசுகளான தெலுங்குச் சோழர், காடவராயர், சம்புவராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் இடம்பெறுகின்றன.

தொண்டை மண்டலம் பல்லவர் ஆட்சிக்குப் பின் சோழ மன்னன் 'முதலாம் ஆதித்தன்' தொண்டை நாட்டுப் பகுதியைக் கைப்பற்றினான் என்பதை 'தொண்டை நாடு பாவின சோழன்' என்று இவனை தில்லைஸ்தானக் கல்வெட்டு கூறுகிறது. எனவே சோழர் அரசு தோன்றிய பின்னர் முதலாம் ஆதித்தன் காலத்தில் தான் தொண்டை மண்டலம் சோழர் ஆட்சிக்குப்பட்டிருந்தது எனலாம். இவனையடுத்து ஆட்சிசெய்த முதலாம் பராந்தகன் தொண்டை மண்டலத்தையடுத்துள்ள நெல்லூர் பகுதியினை ஆட்சி செய்த சிற்றரசர்கள் பாணர்கள், வைதும்பர்களின் பகுதிகளை கைப்பற்றினான். இவர்கள் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனிடம் முறையிட மூன்றாம் கிருஷ்ணன் சோழ அரசு மீது போர் தொடுத்தான். தக்கோலம்

என்ற இடத்தில் நடைபெற்ற போரில் முதலாம் பராந்தகனின் மகன் இராஜாதித்தன் அப்போரில் இறந்தான். அதன் பின்னர் 25-ஆண்டுகள் தொண்டை மண்டலம் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. முதலாம் இராசராசன் காலத்தில் தான் முழுவதுமாக தொண்டை மண்டலம் சோழப் பேரரசின் கீழ் வந்தது. இத்தொண்டை மண்டலத்தை வெற்றி கொண்ட இவ்வெற்றியினை குறிக்கும் வகையில் பின்னர் இம்மண்டலத்திற்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்று பெயர் இடப்பட்டது.

முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1018-1054)

முதலாம் இராசேந்திரனின் மூத்த மகனான முதலாம் இராசாதிராசனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.-1050) அருளாளப் பெருமாள் கோயில் நரசிம்மசாமி சன்னதி உட்புற வலதுச் சுவரில் இடம் பெற்றுள்ளது. அருமொழிதேவ வளநாட்டு கொழவைமங்கலத்து ஊர்த்தலைவன் அய்யன் செட்டியார் மகள் இராஜமாணிக்கத்தார் எனும் ஜெயங்கொண்ட சோழ வீர நுளம்பமகாதேவியார் என்பவள் திருவத்தியூர் ஆழ்வாருக்கு காது ஆபரணம் ஒன்றும், விளக்கெரிக்க ஆடுகளும் தானமளித்துள்ளச் செய்தியைக் கூறுகிறது.

முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120)

முதலாம் குலோத்துங்கனின் 3-ஆம் ஆட்சியாண்டு தொடங்கி 45-ஆம் ஆட்சியாண்டு வரையிலான 7 கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இம்மன்னனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டும், 36, 43 மற்றும் 45-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் தலா ஒன்றும், ஆட்சியாண்டுக் குறிப்பிடாத கல்வெட்டுகள் இரண்டும் உள்ளன. இம்மன்னனின் 45-ஆம் ஆட்சியாண்டில் சோழ மண்டலத்து விருதராஜபயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு வங்க முழையூர் உடையான் மும்முடிச் சோழன் எனும் அனுக்கப்பல்லவரையன் என்பவன் காலைச் சந்தி வழிபாட்டிற்கு தானமளித்துள்ளான். கோயில் மடைப்பள்ளி, மண்டபம், திருச்சுற்று மதில் ஆகியவற்றை முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவன் 'நரலோகவீரன்' ஏற்படுத்தியுள்ளான்.

விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135)

இம்மன்னனின் எட்டு கல்வெட்டுகள் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. இவனின் 8-ஆம் ஆட்சியாண்டுத் தொடங்கி 17-ஆம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுகள் உள்ளன. விக்கிரம சோழனின் 8-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1126) திருவிந்தளூர் நாட்டு தென் கஞ்சாறு என்னும் ஊரைச் சார்ந்த கஞ்சரம் வசிஷ்டன் குமாரசுவாமி என்பவன் அருளாளப்பெருமாள் கோயில் வளாகத்தில் ஸ்ரீரங்கசாயி எனும் விக்கிரம சோழ விண்ணகர் பெருமாள் இறைவனுக்கு நீராட்டுதலுக்காக வேண்டி 197½ கழஞ்சு பொன் அளித்து பாத்திரம் செய்தளித்திட தானமளித்துள்ளான்.

பொய்கை ஆழ்வார் மற்றும் பூதத்தாழ்வார் ஆகிய இரு வைணவ பெரியார்கள் பிறந்தது கேட்டை நாளாகும். வருடத்தில் வரும் 13 கேட்டை நாளுக்கும் வழிபாடு

நடத்திட 750 கலம் நெல் தானமளித்து அந்நெல்லிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு இவ்வழிபாடு நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தானத்தை சோழ மண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு வங்க முழையூர் என்ற ஊரைச் சேர்ந்த வேங்கடன் ஆதித்ததேவன் எனும் வங்கத்தரையன் என்பவன் அளித்துள்ளான். இம்மன்னன் தன்னுடைய பெயரில் எழுப்பியுள்ள விக்கிரமச் சோழ விண்ணகர் ஆழ்வார் சன்னதியில் தனது 11-ஆம் ஆட்சியாண்டில் விக்கிரம சோழ விண்ணகர் ஆழ்வார் திருவுருவினை எழுந்தருளிவந்துள்ளான். மேலும் இவ்விறைவன் வழிபாட்டிற்காக வேண்டி காலியூர் கோட்டம், காலியூர் நாட்டிலிருந்த வில்வலம் என்னும் ஊரின் பெயரை தனது பெயரால் அகளங்கநல்லூர் என்று பெயர் மாற்றம் செய்து தானமளித்துள்ளான்.

இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146-1163)

இரண்டாம் இராசராசனின் 3-ஆம் ஆட்சியாண்டு முதல் 27-ஆம் ஆட்சியாண்டு வரையிலான 7 கல்வெட்டுகள் மலைப்பகுதி சுற்றுச் சுவர்களில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் இம்மன்னனின் 22-ஆம் ஆட்சியாண்டில் கூத்தனூரைச் சேர்ந்த சேட்டலூர் பொம்மன் என்பவரின் மகள் பேரருளாளன் கொற்றி என்பவள் தன்னுடைய ஆபரணங்களை விற்று 100 குழிநலத்தினை வாங்கி, தன்னுடைய வாழ்நாள் மறைவிற்கு பின்னர் அந்நிலத்தினை அருளாளப் பெருமாள் கோயிலுக்கு வழங்கிட வழிவகைச் செய்துள்ளான்.

இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163-1178)

இம்மன்னனின் கல்வெட்டு ஒன்று மட்டுமே இரண்டாம் திருச்சுற்று வடபுறச் சுவரில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு இம்மன்னனின் 14-ஆம் (கி.பி. 1177) ஆட்சியாண்டைச் சார்ந்தது . இக்கல்வெட்டில் கங்கமண்டலத்து மகாமண்டலிகன் சோழ மாராசன் கட்டி நுளம்பன் புசபலவீரன் அகோமல்லரசன் திருநந்தவனம் அமைக்க நிலம் வாங்கித் தானமளித்துள்ளச் செய்தியைக் கூறுகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218)

மூன்றாம் குலோத்துங்கனின் 11-ஆம் ஆட்சியாண்டு முதல் 37-ஆம் ஆட்சியாண்டு வரையிலான 22 கல்வெட்டுகள் உள்ளன. இம்மன்னனின் அரசியல் அதிகாரிகள், இவனது அரசின் கீழிருந்த சிற்றரசர்கள் இக்கோயிலுக்கு தானமளித்துள்ளதைப் பெரும்பாலானக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மூன்றாம் குலோத்துங்கனின் 35-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1134) அருளாளப் பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் அமைந்துள்ள ஆனந்தாழ்வார் சன்னிதியை கங்கநாட்டை ஆட்சிசெய்த சிற்றரசன் சீயகங்கன் என்பவன் கட்டியச் செய்தியை தருகிறது. இவனை கங்க குலத்தினன் என்றும், குவளாலபுர பரமேஸ்வரன் என்றும் (குவளாலபுரம் என்பது தற்போதைய 'கோலார்' பகுதியாகும்) கல்வெட்டு கூறுகின்றது. தன் நாட்டிலிருந்த பவணந்தி முனிவரைக் கொண்டு 'நன்னூல்' என்ற இலக்கண நூல் இயற்றுவித்தவன் இவனே. இவனை அந்நூற்பாயிரம் 'அருங்கலை

விநோதன் அமராபரணன்' என்று பாராட்டுவது குறிப்பிடத்தக்கது. இவனது பெயரில் 'அமராபரணம்' சந்தி என்று ஏற்படுத்தியுள்ளதையும் இங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1256)

இம்மன்னனின் கல்வெட்டுகள் இக்கோயிலில் அதிகம் காணப்படுகின்றன. அதாவது 84 கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இம்மன்னனின் காலத்தில் தொண்டைமண்டலப்பகுதி காடவராயர், தெலுங்குச் சோழர், சம்புவராயர், வாணகோவராயர் ஆகிய சிற்றரசுகள் சோழர் ஆட்சியின் கீழ்கட்டுப்பட்டு வரி செலுத்திவந்துள்ளனர். ஏனெனில் இவர்களின் கல்வெட்டுகள் சோழ மன்னன் இராசராசனது பெயரையும் ஆட்சியாண்டையும் குறிப்பிட்டுள்ளனர்.

கீழைக் கங்கர்

கீழைக் கங்க மன்னன் தனது 19-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1230) இவனின் தேவியான சோமலாதேவி மகாதேவி என்பவள் உடையகாமம் என்ற ஊரினை அருளாளப் பெருமாள் வழிபாட்டிற்கு கொடையாக அளித்துள்ளாள். கலிங்க மன்னன் அணியங்க பீமதேவராகுதன் விளக்கெரிக்க மாடுகள் தானமளித்துள்ளான்.

போசளர்கள்

போசள மன்னன் விஷ்ணுவர்த்தன வீர நரசிம்மனின் அமைச்சர் அம்மண தண்டநாயக்கர், படைத்தளபதி மல்ல தண்டநாயக்கர் மகன் தண்டின கோப ஜெகதொப்பகண்ட கொப்பய தண்டநாயக்கன், வீர சோமேஸ்வர தேவராசாவின் அமைச்சர் போலாழ்வி தண்டநாயக்கன், போசளமன்னனின் படைத்தளபதி தண்டினகோப மாதய்ய தண்டநாயக்கர், படைத்தளபதி தண்டின கோபனின் சகோதரர்களான மல்ல மாதவ்யதண்ட நாயக்கன், கேசவ நாயக்கன், கொப்பய தண்ட நாயக்கர் ஆகியோர் இக்கோயிலுக்குத் தானமளித்துள்ளனர். போசள மன்னன் இரண்டாம் சோமேஸ்வரனின் பட்டத்து அரசி தேவிகா என்பவள் சாளுக்கிய வம்சத்தைச் சார்ந்தவள் என்று இம்மன்னனின் கல்வெட்டு ஒன்று பகர்கிறது.

தெலுங்குச் சோழர்

மூன்றாம் இராசராசனின் 5-ஆம் ஆட்சியாண்டில் நெல்லூரை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த தெலுங்குச் சோழ சிற்றரசன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் எனும் எறசித்தரசன் என்பவனின் அமைச்சர் வயிரப்பநாயக்கன் என்பவன் தனது தாயார் காமசானியார் உடல் நலம் பெற வேண்டி 200 குழிநிலத்தினை திருநந்தவனமாக செய்வதற்கு தானமளித்துள்ளான். கண்டகோபாலருக்கு இருந்த தேவியருள் ஒருவர் கேத்தமல தேவியார் என்பதை கல்வெட்டு எண்-51 தெரிவிக்கிறது.

மதுராந்தகப் பொத்தப்பிச் சோழ மனுமசித்தரசன் திருக்காளத்திதேவன் எனும் கண்ட கோபாலன் அளித்த தானங்கள் பற்றி கூறும் கல்வெட்டுகள் மட்டும் 30

எண்ணிக்கைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவனின் படைத்தளபதி காமிநாயக்கன், தியாகசமுத்திர பட்டயார், நுளப்பியாற்றுழான் நாராயண நம்பி தாமோதரன் ஆகியோரும் அருளாளப் பெருமாள் கோயிலுக்கு கொடையளித்துள்ளனர். அல்லுந்திக்க மகாராஜ கண்ட கோபாலனின் 2,3,5,6,7 ஆகிய ஆட்சியாண்டுகளைச் சார்ந்த எட்டு கல்வெட்டுகள் இக்கோயிலில் இடம்பெற்றுள்ளன.

'Kanchipuram through the ages" ஆசிரியர் சி.ஆர். சீனிவாசன் அவர்கள் விசைய கண்டகோபாலன், வீர கண்ட கோபாலன், ஆகிய இருவரும் தெலுங்கு பல்லவர் என்று குறிப்பிட்டுள்ளார். ஏனைய வரலாற்று ஆசிரியர்கள் தெலுங்குச் சோழர் என்றே குறிப்பிட்டுள்ளனர். விசைய கண்ட கோபாலனின் காலம் கி.பி. 1250-1291 ஆகும். இம்மன்னனின் கல்வெட்டுகள், 20 கல்வெட்டுகள் உள்ளன.

பிற்காலப் பல்லவர்

பிற்காலப் பல்லவர்களின் குறிப்பிடத்தக்கவன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ஆவான். அவனின் கல்வெட்டுகள் 6 எண்ணிக்கைகள் இடம்பெற்றுள்ளன. நெல்லூர் நாட்டு மண்டகத் தளியைச் சேர்ந்த சந்திரசெட்டி விளக்கெரிக்க 44 மாடுகள் தானமளித்துள்ளார். மலைமண்டலத்து அரசியல் அதிகாரியான நாராயணன் சங்கரன் என்பவன் தானமளித்துள்ளான். அருளாளப்பெருமாள் கோயில் கோபுரத்தினை சீர் செய்ய வேண்டி சோமங்கலம் கிராமத்தின் 'அரிப்பாடிகாவல்' வரி தவிர அனைத்து வரிகளையும் கடகன் எனும் நீலகங்கரையன் வழங்கிட கோப்பெருஞ்சிங்கனின் 15-ஆம் ஆட்சியாண்டில் ஏற்பாடு செய்துள்ளான். நெல்லூர் அன்னல தேவனின் மைத்துணி செவ்வக்கன் என்பவள் 15 நெல்லூர் மாடை அளித்து விளக்கெரிக்க ஏற்பாடு செய்துள்ளாள்.

பிற்காலப் பாண்டியர்

சோழப்பேரரசுக்கு பின்னர் ஏற்பட்ட பிற்காலப் பாண்டியரில் வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

தொண்டைமண்டலப்பகுதி பிற்காலச் சோழர் காலத்தில், இப்பகுதியில் இருந்த சிற்றரசுகளான பிற்காலப்பல்லவர், சம்புவராயர், காடவராயர், வாணகோவராயர், தெலுங்குச் சோழர் ஆகியோரின் கட்டுப்பாட்டிலே இருந்துள்ளது. பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டுகளில் அச்சிற்றரசர்கள் அளித்துள்ள கொடைகள் பற்றிய கல்வெட்டுகளே இதற்குச்சான்றாகும்.

இந்நூல் குறுகிய காலத்தில் சிறப்புற வெளிவரக் காரணமாயிருந்த இத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள். கல்வெட்டுக் குறிப்புரைகளை நெறிபடுத்திய இத்துறை மேனாள் கல்வெட்டாய்வாளர் திரு. சீ. இராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி.

இரா. சிவானந்தம்
கி. சு. சம்பத்

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 1**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	32
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1050
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	519/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1

அரசன் : முதலாம் இராசாதிராசன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னிதி உட்புற வலதுபுறச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டுச் சேதமடைந்துள்ளது. அருமொழிதேவ வளநாட்டு, அளநாட்டு கொழவாய் மங்கலத்து ஊர்த்தலைவன் ஐய்யந் செட்டியார் மகள் செட்டி ராஜமாணிக்கத்தார் எனும் நுளம்பமாதேவியார் என்பவள் திருவத்தியூர் ஆழ்வாருக்கு விளக்கெரிக்க 96 ஆடுகள் தானமளித்துள்ளாள். மேலும் இறைவனுக்கு காதணி (திருவாளி) தானமளித்துள்ளாள். இவளது முழுப்பெயர் ஜெயங்கொண்ட சோழவீர நுளம்பமாதேவியாராந செட்டி ராஜமாணிக்கத்தார் என்பதாகும். இவள், நிலங்குடிதாங்கியாரான ஜயங்கொண்ட சோழ வீரநுளம்பரின் மனைவியாவாள்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] திங்களேர் தருதன்றொங்கல் வெண்குடைக்கீழ் நிலமகள்
   னிலவ மலர்மகள் புணர்ச்ச . . .
2. லோச்சிக் கருங்கலி கடிஞ தன் சிறியதாதையும் திருத்தமையனையுங்
   குறிகொள் தன் இளங்கோக்களையும் நெறியு
3. . . தன்றிருப்புதல்வர் தம்மையும் துன்றெழில் வானவன் வில்லவன் மீனவன்
   கங்கன் இலங்கையற் கிறைவன்
4. . . . ற பல்லவன் கன்ன குச்சியர் காவலனென பொன்னணி சுடர்மணி
   மகுடஞ் சூட்டி படர்புகழாங்கவர்க்கவர் நாடருளி பாங்கு

5. . . . ழுதவஜ . . . . தெரியல் விக்கிரமநாரணன் . . . . ன்டிபடுத்தருளி . . . ஊ

6. . . . . தெந்நவர் மூவருள் மாநாபரணந் பொந்முடிப்பெருமநி பசுஜலைப்பொருகளத்தரிஜ வாரளவியகழல்

7. . . . . கதக்களிறாலுதைப்பித்தருளி அஜமில் பெரும்புகழ் சுஜரபாண்டியந் கொற்ற வெண்குடையும் கற்றைவெ

8. . . . . விழ தலைவிரித்தடிதளஜொட தொல்லைமல் முல்லையூர் துரத்தி ஓல்கலில் வேணாட்ட

9. . . . . வில்லவந் குடர்மடிக் கொண்டு தந்நாடு விட்டொடி காடு புக்கொடிளிப்ப வஞ்சியம் புதுமலர்

10. மலைதொங் கெஞ் சலில் வேலைகெழு காஜளூர்ச் சாலை கலமறுப்பித்தா[ஹ]வமல்லநு மஞ்சக்கேவுதந்றாங்கரும் படையாலாங்கவந் சேநையுள் கண்டப்ப . .

11. நும் கங்காதரநும் வண்டமர் களிறொமடிய திண்டிறல்விரிதர விக்கியும் விசயாதித்தநும் கருமுரட்சாங்கமை[ய*]நும் சமரருவத்துடை விரிசுடர்பொ

12. . . யங்கரிபுரவியொடும் பிடித்து தநாடையிற் ஜயங்கொண்டு தஹார் கொள்ளிப்பாக்கையுள்ளரி மடுத்து ஒருதநித்தண்டாற் பொருகடல்லி[ல*] ங்கை

13. யர்கோமாந் விக்கிரமவொஹ ுவிந் மகுடமும் . . நக்குடைஜ தெந்றமி . .

14. . . . . முழுவதுமிழஜ ஏழ்கடல்லீழமும் புக்கிலங்கேசநாகிய விக்கிரமபாண்டியந் பருமணிமு[டி*]யும் காண்டருதஹதாகிய . . . . . .

15. ல்லீழம் சீரி[தெந்]றெண்ணி உளங்கொள் நாடு தன்னுறவொடும் புகுஜ விளங்குமுடி கவிஜ விரசலாமேகந் போர்க்களத்தஞ்சி தந் கார் . . றிழஜ கவ்வையிற்றோடி

16. காதலியொடு ஜறாவ்வையை பிடித்து தாயை மூக்கரிய ஆங்க[வ*]மாந நீங்குவதற்காக மிட்டும் வஜ வாட்டொழிலிழிஜ வெங்களத்துலவஜ சிங்கள

17. த்தரசந் பொந்நணிமுடியும் கன்னரன்வழி வஜரை கொளி[ழ*]த்தரைசந[ர*]கிய ஸ்ரீவல்லபமதநராஜந் மெல்லொளித்தடமுடி வடபுலத்திருகாலா

18. வதும் பொருபடை நடாத்திக்கண்டர் திநகரநாரணந் கணவதி வண்ட

19. . . . யல் மதுசூதந . . . வரைசரை முநைவயிற்த்துரத்தி வம்பமந்தருபொழில் கம்பிலிநகருள் சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் . . . கமில்தந் . .

20. . . . . களிற்றுச் சக்கரவத்தி விக்கிரமநாரணநறந் படைஞரை ஏவி முந்பமர் ஆஹவமல்லர் அஞ்சி

21–28 . . . . . .

29. பெரும்புகழ்[க்*] கோவிராஜகேசரிபஹராந உடைய[ார்*] ஸ்ரீ ராஜாயி ராஜ தெவர்க்கு யாண்டு [ஈ]ல்உ ஆவது திருவத்தியூர் ஆழ்வார்க்கு வளவநங்

30. . . டியார் நிலங்குடிதாங்கியாராந ஜயங்கொண்டசோழவீர நுளம்பர்க்கு புக்க அருமொழிதேவ வளநாட்டு அளநாட்டு கொழவாய்மங்கலத்துக் கொழ

31. வாய்மங்கலங்கிழார் ஐய்யந்செட்டியார் மகளார் செட்டிராஜமாணிக்கத்தாராந நுளம்ப மாதேவியார் தங்களாச்சி வேளாநாரால் மு . . . ச்ச . . வச

32. தி . . விளக்கு ஒற்நிக்கு வைத்த ஆடு தொண்ணூறும் கார்த்திகைக் காத்திகையக்கு வையத்த ஆடு அஞ்சும் ஆக ஆடு தொண்ணூற்று அஞ்சும் இவை

33. . . . . ற்றில் திருவத்தியூர் இருக்குமந்றாடி பெரியாந் புகழியாந பஞ்சவந் மாதேவிக்கோந் கொண்ட ஆடு நாற்பத்தேழ் அரைக்கு அட்டக்கடவ நெய்

34. . . . த்திகைக் காத்திகையக்கு நெய் இருநாழி உரியும் ஊறில் காத்தநாந புவலோக மாணிக்ககோந் கொண்ட ஆடு நா[ற்பத்தேழரை . .] அட்டக்க

35. . . . க்கும் காத்திகைக் காத்திகையப் நெய் இருநாழி உரியும் ஆக நித்த நெய் உழக்கும் காத்திகையப் கார்த்திகையக்கு நெய் அஞ்ஞா . . . . . முட்டாமே [செ]லு

36. . . . வ்விருவோம் இப்படி முட்டாமேய் அட்டுவிப்பதாநோம் திருவத்தியூரர்[ழ்*]வார் தெவர் கநியளோம் யாண்டு [ஈ]ல்உ டாவது ஜையங்கொண்

37. டசோழவீர நுளம்ப மாதேவியாராந செட்டி ராஜமாணிக்கத்தார் ஆழ்வார்க்குச் சாத்த இட்ட திருவாளி +. . . . . ளி சொற்பட்

38. ந . . . ல்ல அ . . க்காளும் இதில் முத்து ஒற்றி நிறை கழஞ்சே ஏழுமஞ்சாடியும் குன்றியும் அ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 2**

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : முதலாம் குலோத்துங்கன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயிலுள்ள பாறையில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருவத்தியூர் ஆழ்வார் தினசரி வழிபாட்டுத் தேவைகளுக்காக வேண்டி தேவதானமாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சி ஆண்டு : 3

வரலாற்று ஆண்டு : கி.பி. 1073

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 403/1919

முன் பதிப்பு : -

ஊர்க் கல்வெட்டு எண் : 2

கல்வெட்டு :

1. யாண்டு ந ஆவது ாசு னால் திருஅத்தியூராழ்வாற்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக சக்கரவத்திகள் சி குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ந
2. ஆவது திருவாய்மொழிந்தருளி தேவதானமாக இட்டுக் களப்பாளராயரும் மழவராயரும் சித்தராயரும் வயனாட்டரையரும் புரவுவரி ஸ்ரீகரணநாயகம் செம்மாம்பாக்கிழ–
3. ானும் இறையங்குடி கிழவனும் கடலூர் கிழவனும் இரையூருடையானு[ம்*] முகவெட்டி பனையூருடையானும் புஞ்சிற்றூருடையானு முகையூர் கிழவனும் எழுத்திட்
4. டுவந்த உள்வரிப் பொத்தகத்தில் கோத்து ஊர்முதலில் பாட்டெறிந்தபடிக்கு உள்வரி சிறுகச்சி[ப்]பேடு சத்திமங்கலம் உட்பட அளவின்படி நீங்கல் நீக்கி இருபூவி
5. ளை ரூ ருய ஃ வத ஒரு பூவிளை ரூ ாருயஉருச வ வத ஆக நீர் ரூ ஊாஉருகூசு னால் வரிசை கொண்ட ரூ ஊாருயஉ இச சூத னால் வே[லி] க க்கு ஊ ந . ா ஆக நசு

6. [ஹ]தருோஅயிஹாகூகூ புன்செய் ருோ . . யக இகூ ஒ ஙி னால் வேலி க க்குவூ நஹா ஆக நாயிகாகூகூ ஆக புன்செய் உட்பட ருோநாசயிஹவ கூகூஒஓ னால் வரிசைப்படி

7. நஎதாகாகசம ந ஆவது முதல் தேவதானமாக இட்டமைக்கு இவை வரிப்பொத்தகநாயகம் சிறுமாங்காடு கிழானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணநாய

8. கம் வாணியனெ[ழு*]த்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி ஐயண்டம்பாக்கிழா னெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி அளகுழானெழுத்து இவை

9. புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி அழிசுபாக்கமுடையானெழுத்து[II*]

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 3**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1073
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	522/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3

அரசன் : உடையார் ஸ்ரீராஜேந்திர தேவர் (முதலாம் குலோத்துங்கன்)

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னிதி கோபுர இடதுபுறச் சுவர்.

குறிப்புரை : திரைமூர் நாட்டைச் சார்ந்த ஊர்த்தலைவர் இக்கோயில் திருநந்தவனத்தில் திருமாம்பழமுடையான் எனும் பெயரில் எடுப்பித்த திருமண்டபத்தில் இறைவன் எழுந்தருளும்போது வழிபாட்டிற்காக அறுபது காசுகள் திருவத்தியூர் பண்டாரத்தில் கொடுத்துள்ளார். சபையார் அறுபது காசுகள் பெற்றுக்கொண்டு நிலம் ஒன்றினைத் திருவத்தியூர் இறைவன் வழிபாட்டுக்காக விற்றுக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ[॥*] திருமன்னிவிளங்குமிருகுவிடனையதன் தோளும் வாளும் துணையெனக்கேழலர்
2. வஞ்சனை கடந்து வயிராகத்துக் குஞ்சரக்குழாம்பல வாரி யெஞ்சலில் சக்கரக்கோட்டத்து தாராவரச[ன்*]னத்திக்கு
3. நிகழத் திறைகொண்டருளி அருக்கனுதையத்தாசையிலிருக்கும் கமலமனைய நிலமகள் தன்னை முந்நீர் குளித்தவந்
4. நாள் திருமால்லாதி எடுத்தன்ன யாதுஞ்சலியா வகையிநிடுத்துதன் குடைநிழலில் இன்புறவிருத்தி திகிரியும் புலியு
5. ந்திசைதோறும் நடாத்தி புகழுந் தருமமும் புவிதொறும் நிறுத்தி வீரமும் தியாகமும் மானமுங் கருணையும் உரிமைச் சுற்றமாகப் பிரியாத்த

6. ல நிகழ் சயமும் தாநும் வீற்றிருந்து குலமணிமகுடமுறையிற் சூடிதந்கழல்
தராதிபர் சூட செங்கோல் நாவலம்புவிதொறும் நடாத்

7. தி கோவிராஜகேசரிபந்மராந உடை[யார் ஸ்ரீரா]ஜேஜ்ர சோழ[தேவ]ர்க்கு யாண்டு
மூன்றாவது ஜயங்கொண்டசோழமண்டலத்து

8. எயிற்கோட்டத்து எ[யில்] நாட்டு திருவத்தி . . . . . சோழமண்டலத்து
. . . . . வளநாட்டுத் திரைமூர் நாட்டு ந

9. டார் கிழார் ராஜராஜ . . . . . வேளார் செயிதத் திருநன்தவனம்
திருமாம்பழம் உடையாநு[ழ்]க்

10. குங்குடிகள் மூவர்க்குக் கோற்றுக்குப்புடவை . . . . . [ஆ]ழ்வார்
திருநாட்களில் திருவிழாவெழுஞருளி இத்திருநஞவனத்தில் இவர் எடு

11. ப்பித்த திருமண்டபம் திருமாம்பழமுடையாநில் எழுஞருளி இருஞ
சிறுசோற்றமுது செய்தருளுகைக்கும் வேண்டும் நிமஞங்களுக்கும்

12. பூமிகொள்ள இவர் திருவத்தியூராழ்[வார்] பண்ட[ாரத்தி]ல் ஒடுக்கிவைத்த
காசு அறுபது இக்காசு அறுபதும் காலியூர்க்கோட்டத்து காலி

13. யூர் நாட்டு வ்ரஹதெயம் தெனந . . . ப்பாக்கத்து பெருங்குறி ஸஹையோங்
கொண்டு நாங்கள் விற்று [குடு*]கிற நில

14. மாவது எங்களூர் தெந்கழநியில் நாலாங்கண்ணாற்று நாங்கள் விற்றுகுடுக்கிற
பூமிக்கு கீழ்பாற்கெல்லை மிருகத்தலத்து இளை

15. ய அருளாளக்கிரமவித்தந் . . . . எந்நுஞ்செறுவுக்கு கிழக்கடைய பாதிக்கும்
தூதகரி கோளரிக்கிரமவித்தந் தாமந்செறுவு

16. க்குப் புண்டரவர்த்தநத்து . . . ல கூத்தந் . . . . செறுவுக்கும்
சடைப்பள்ளத்துக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை குடிமாத்து

17. ச்சிறுநாவற்கிரமவித்தந் . . . . எந்நுஞ்செறுவுக்கும் தூதகரி அநஞநாராயணக்
கிரமவித்தந் காரிசுற்றி அறுமாவுக்கு வடக்கும் மே

18. ல்பாற்கெல்லை திருவரங்கப்பெருவதிக்கு கிழக்கும் வடபாற்கெல்லை
தூதகரிச்சொட்டை ச . . . ரிச்செறுவுக்கும் தூதகரி மதுராஞ்ஜகிர

19. மவித்தந் களரிச்செறுவுக்கும் தூதகரி மூத்த திருவாய்க்குலக்கிரமவித்தந்
களரிச்செறுவுக்கு தெற்கும் இந்நாந்கெல்லையுள்ளு நடுவுபட்ட தடி

20. பலவிநால் ஸ்ரீபாதக்கோலால் குழிநாலாயிரமும் எங்களூர் வடகழநியில் விற்கிற
நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை தூதகரி அநஞந[ா*]ராய

21. ணக் கிரமவித் தந் கோட்டைகாடந் ஏத்ததுக்கு மேற்கும் தெந்பாற்கெல்லை[அ]மபங்கால் கொல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை புண்டவர

22. . . . . கிரமவித்தந் . . . . . கிலும் தூதகரி திருவத்தியூர் நிந்றான் பளியோட்டை ஏத்தக்குண்டிலுக்கு கிழக்கும் வ

23. . . . . கும் இந்நாந்கெல்லை யுற்பட்ட தடிபலவிநால் ழநிபாதக்கோலால் குழி இரண்

24. டாயிரமும் ஆக குழி ஆறாயிரத் . . . . . லியும் நாங்கள் விற்றுக்குடுத்த பரிசாவது வேலி ஒந்றுக்கு விலை

25. . . ழம் இறை ஞவிஞத்துக்கும் காசு யிருபதா . . . . . ஆவணக்களியே அறக்கொண்டு இந்நிலம் மூவேலியும் விற்றுக்குடுத்தோ

26. ம்இந்நிலத்துக்கு பூப்பொந்நும் பஞ்சவாரமும் உள்ளிட்ட கோயிற்குடிமை வெட்டி முட்டை ஆள் சில்லிறை சோ

27. று . . . . . ச்சோற்றுக் கூற்று நெல்லு எப்பேர்ப்பட்டதும் நாங்களே ஊர்மேலே வரிஞ இறுப்பொ

28. [ம்] இந்நிலத்துக்கு நிர்க்கிஞவாறு நீர்பாச்சிக்கொள்ளப்பெறுவதாகவும் இந்நிலம் நாங்களே கைக்கொ

29. . . . . ற்கு அருமொழி தே . . . லால் நெல் நாற்பதிந் கலமாக ஆண்டுவரை நூற்றிரு

30. . . . . அழுது செய்தருளவேண்டும் நிமஞங்களு

31. . . . . ஆணைக்க . . . . அறுத்த நிலத்தால் வஞ போகம் நாங்க

32. . . மாகவும் . . . . . முந்சொல்லபட்ட ஸேநாபதிகள் வீரசோழ . . . . . .

33. . . . . குங்குடிகளுக்கு திருநஞவநப்புறமாக இறைஇழிஞ்சி இறையிலி

34. . . . . நமாக விற்று விலை ஆவணஞ் செய்து குடுத்தோ

35. . . . ம்பாக்கத்து . . . யோம் இவர்கள் பணிக்க எழுதிநேந் சீயபுரமுடையாந் அத்தியூரந் ஆயகொழு . . [॥*]

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 4**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	36
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1106
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	631/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில், அபிஷேக மண்டபத்தின் முன் உள்ள கோபுர கிழக்குச் சுவர்			
குறிப்புரை	:	முதலாம் குலோத்துங்களின் மெய்க்கீர்த்தி மட்டும் இடம்பெற்றுள்ளது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [II*] புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நி . . . . . முடிசூடி மீனநவர் நிலைகெட வில்லவ[ர்] குலைதர எனைமன்னவர் இரியலுற்றிழிதரத் திக்கனைத்துஞ்சன் சக்கரநடாத்தி வீரஸிம்ஹாஸநத்து அவனிமுழுது

2. முடையாளோடும் வீற்றிருகருளிய கொவிராஜகேஸரி . . . . . லோத்துங்க சோழ தேவற்கு யாண்டு நகூ ஆவது சோழமண்டலத்து குலோத்துங்க சோழ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 5**

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

ஆட்சி ஆண்டு : 43

வரலாற்று ஆண்டு : கி.பி. 1113

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 49/1893

முன் பதிப்பு : தெ.இ.கல்.தொ. IV. எண். 862

ஊர்க் கல்வெட்டு எண் : 5

அரசன் : முதலாம் குலோத்துங்கன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் அபிஷேக மண்டபத்தின் அருகிலுள்ள கோபுர நுழைவுவாயில் இடதுபுறச்சுவர்.

குறிப்புரை : சோழமண்டலம், குலோத்துங்க சோழ வளநாட்டு, திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியைச் சேர்ந்த கருணாகரன் எனும் தொண்டைமானார் என்பவரின் மனைவி அழகிய மணவாளனி மண்டையாழ்வார் என்பவள் திருவத்தியூர் ஆழ்வாருக்குத் திருநந்தாவிளக்கு ஒன்று கொடையளித்துள்ளாள். குலோத்துங்கனது இறுதி காலத்தில் கி.பி. 1112–ல் நடைபெற்ற வடகலிங்கப் போரை நடத்திப் பெருவெற்றியுடன் திரும்பியவன் இவனது படைத் தலைவர்களுள் முதல்வனாகிய கருணாகரத் தொண்டைமான் என்பவனாவான். இவனைப் பற்றி கலங்கத்துப் பரணி நூல் கூறுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கருணாகரனானத் தொண்டைமான் என்பவன் இவனே. இவனது மனைவிப் பெயரே அழகியமணவாளனி மண்டையாழ்வார் என்பதாகும். இவனின் ஊர் திருநறையூர் நாட்டிலுள்ள வண்டாழஞ்சேரி ஆகும். இவ்வூர் தற்போது வண்டுவாஞ்சேரி என்று அழைக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[*] புகழ்மாது விளங்க செயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற்சிறஞ மணிமுடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலதர
2. ஏனைமன்நவரி[ரி*]யலுற்றிழிதரத் திக்கனைத்துஞன் சக்கரநடாத்தி வீரஸிம்ஹாஸநத்து அவநிமுழுதுமுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரிவர்ராந திரு
3. வநசகூ_வதி²கற் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு நாற்பத்துமூந்று ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து திருவத்தி
4. யூராழ்வ[ா*]ர்க்கு சோழமண்டலத்துக் குலோத்துங்கசோழவளநாட்டு திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் வேளான் கருணாகரநாந தொண்டைமானார்
5. தேவியார் அழகியமணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநுஞாவிளக்கு[॥*]

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 6**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	45
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1115
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	632/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில், அபிஷேக மண்டபத்தின் முன் உள்ள கோபுர நுழைவு வாயில் வலதுபுறச் சுவர்			
குறிப்புரை	:	சோழமண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு, மண்ணிநாட்டு வங்கமுழையூர் உடையான் அரையன் மும்முடிச்சோழன் எனும் அனுக்கப்பல்லவரையன் சிறுகாலைச் சந்தி வழிபாட்டிற்குத் தேவையானவற்றை 182 காசுகளின் வட்டியிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு செய்ய வழிவகைச் செய்துள்ளான். இவன் குலோத்துங்கனின் அரசியல் அதிகாரிகளில் ஒருவன்.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [II*] புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறஞ மணிமூடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர்க் குலைத்தர ஏனைமன்நவர் இரியலுற்றிழிதரத் திக்கனை
2. த்தும் தன்சக்கரநடாத்தி வீரஸிம்ஹாஸநத்து உலகுடையாளோடும் வீற்றிருஞ்சருளிய கோவிராஜகேஸரிவர்மாந தி_வுவநசக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நா[ற்]
3. பத்து அஞ்சாவது III– சோழமண்டலத்து விருதராயபயங்கர வளநாட்டு மண்ணிநாட்டு வங்காமுழையூருடையாநரையன் மும்முடி சோழநான அனுக்கபல்லவரையன் நாற்பத்தஞ்சாவது நாள் நூற்[று]
4. த்தொண்ணூறு முதல் நித்தம் நிமஞமாக சிறுகாலைச்சஞ்சி பால் திருப்போநகம் அமுது செய்தருளுகைக்கு நாளொன்றுக்கு திருப்போநகப் பழவரிசி நாநாழிய் நாலிரண்டஞ் சாக்கி நெல் குறுணி இருநாழியு[ம்]

5. பால் குறுணி இருநாழிக்கு பால் நாழிக்கு நெல் முந்நாழியாக நெல் முக்குறுணி அறு நாழியுமாக நெல் ஐய்ங்குறுணிக்குக் காசு[க்க] நெல் அருமொழி நங்கைமரக்காலால் நெல் பதி . .

6. மாக்காசு முக்காணி முஞ்சிரிகை கீழாறுமாமுஞ்சிரிகை பலவர்க்கத்துக்கறி நிறை இருபதின் பலத்துக்குக் காசு ஒன்றுக்கு கறிநிறை பதிநாயிரப்பலமாகக் காசு கீழரையே மூன்று மாவும் சர்க்கரை [நிை]

7. ற ஐய்ம்பலத்திநால் காசு ஒன்றுக்குச் சர்க்கரை ஆயிரத்துநாநூற்றுப் பலமாகக் காசு கீழ்முக்காலும் வாழைப்பழம் பத்திநால் காசு ஒன்றுக்குப் ப[ழம்]

8. மூவாயிரத்தறு நூ[றா]க்காசு கீழ்முக்காலும் மிளகு இருசெவிடரையிநால் காசு ஒன்றுக்கு மிளகு இருபத்தெண்ணாழியாக காசு கீழ்முக்காலும் சீரகமரைச் செவிடிநால் காசு ஒன்றுக்கு சீரக[ம்]

9. பதினாழியாக காசு கீழறுமாவரையும் நெய் ஆழாக்கிநால் காசு ஒன்றுக்கு நெய் நாற்பதிநாழிக்குக் காசு அரைக்காணியும் உப்பு ஆழாக்கினால் காசு ஒன்றுக்கு உப்பு ஏழுகலநே தூணிப்பத[க்]

10. காகக் கீழ்மாகாணியும் விறகுகட்டுக்காலினால் காசு ஒன்றுக்கு விறகுகட்டு நாற்பத்தைஞ்சாகக் காசரைக்காணிக் கீழ்நாலும் பாக்கு இருபதிநால் காசு ஒன்றுக்கு பாக்கு பதிநாயிரமாகக்கா

11. ணியே மூன்றுமாவும் வெற்றிலைப்பற்று அரையிநால் காசு ஒன்றுக்கு நாநூற்றிருபதாகக் காசு கீழ்க்காலே அரைக்காலும் கற்பூரம் ஒருமாவிநால் காசு ஒன்றுக்கு கற்பூரம் இருகழஞ்[சரை]

12. யாக காசுமுஞ்சிரிகை கீழ்க்காலும் ஆக நாள் ஒன்றுக்கு வேண்டுங்காசு . . . . . நூற்றிறுபதுக்கு வேண்டுங்காசு இருபத்தா . . . .

13. அன்றாடு அறாகப்படித்திரமம் நூற்றெண்பத்திரண்டிநால் காசின் வாய்த்தன்மங்கலலிசை நாள் முப்பதுக்கு திரமங்கலாக நாள் முன்நூற்றறுபதுக்கு காசு ஒன்றுக்குப் பலிசைத் திரமம்

14. மூன்றாகப் பொலிவதாகவும் பொலிஞ பலிசைக்கு தேவபண்ட[ர*]ரத்தே வேண்டுவரை விட்டு செல்வதாக ஒடுக்கினகாசு அறுபத்தொன்று ॥–

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 7**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	473/1919
மொழி	:	சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	கிரந்தம்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			
இடம்	:	அருளாளப்பெருமாள் கோயில் பாறை வடக்குச்சுவர்			

குறிப்புரை : மண்டபம், திருச்சுற்று மதில், தங்க ஆபரணங்கள், பத்து நந்தா விளக்கு மற்றும் திருநந்தவனம் அமைக்க நிலம் ஆகியவை கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. தொண்டைமண்டலத்து மணவிற்கோட்டத்து 'மணவில்' என்னும் ஊரைச் சேர்ந்தவன் 'நரலோக வீரன்' இவனுக்கு 'அருளாகரன்', 'அரும்பாக்கிழான்', 'பொன்னம்பலக் கூத்தன்' என்ற பெயர்களும் உண்டு. முதலாம் குலோத்துங்கன் இவனுக்கு 'காலிங்கராயன்' என்னும் பட்டமளித்தான். இவன் தில்லை மற்றும் திருவதிகைக் கோயில்களில் பலத் திருப்பணிகளைச் செய்வித்துள்ளான். தேவாரப்பதிகத்தினைச் செப்பேடுகளில் எழுதுவித்து தில்லையில் வைத்தது இவனது சிறப்புப் பணியாகும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*]ஸ்ரா4தி4ஷ்டா2நீ ரஸவிஷ்ரு2ஹொஜியெந வ்ரவ்ரஜ்ர ச்சிஸ்ரகயா
   உஹகொ2ருகஸ்ரு சகெ்ர ஹரெரவ்ரஹ்ரரஸ்ரா2ரத . . ரந்நாய வ்ரணாய
   ஹஸ்தி2வ்ரரயாந்தி உஹாநஸ2ம் ஸ:

2. யீ ரஸ்ரிஹ்ராஹிரயரீக்ர க2வ2ரா4ழ்தி4 வ்ரராகூரஉக்ர[வ]ரிகூஷ்ரு ஸ்ர . . வஜ்ர
   தஸ்ரு2வ்ரஸ்ரா2உஸ்ரஹ்ரஹெந ஸவ்ரெந ஸ்ரா2ஹ்ரா: வ்ர . . . . உண்ட2வஸ்ரதாந்தி
   ஹிநகரீண [ர*]ழ் ॥உ

3. ஸ்ரா2நo ஸரிஹ்ராஹிவ்ரத்திதழ் உ2ரரரெஸ்ரஹ்ரம் ஸசகெ்ர நரஸரொகுவிர
   கிஹ்ரகூரொக கூஷ்ரஹ்ரயெவ்ரஹம்ழ் ரர்ரா[வா]வரிஜாழ்வர ஸீ2வவ்ரழ் ॥உ

4. ஸஷவாஉ தாஉவரிஷம்ஶ உநொஹரந்த யாஉநகாரயத தத . . ரிம ஶகாநம் கூத்வாஸ்ய ஹெஉ கஶம் வியிநொவரிஷாத்த . . ஹிவத்ய வியிநா கரகாஷஸஉந்த ॥ட

5. ஊத: ஷ்டாஹிந: கஶிக . . . . . கூஉஹிரயஷ வ்யாந வ்யகார . . உவஶஸாரி சுதஹரெ[கு]ந்தாஉஶெஷ்டி யவஊ ரகிரித்யஹஜ்ஜந . . உந்ய உஷ்டாஸ்டி ந்ருபகஶநெஉக்யாஹந ச

6. ஸா ஹ்ருதி ஹ்ருதி தந காஜ்ஜா ஈவதாஉத்ய தஷ்டிந்ருசயிதகாரநகஷவா . . ஜ்ஞாநஸ்ய வம்ஸ: வ்யதித ஸ உஶதிவீம் ஶஸ்வதெவஜ்ஜஶ்ரு . . ஹவநஹயதஷ ஸ்ராஸவந்ய நி[ஹ]உ ஈவ: ॥ட

7. தஜ்ஞாஹ்யஷ ஸ்ருஜ்ஞாஸநாஷவஜ்ஜ உபக்ரீடாஷவஜிஜ ச ஶ்ரீயஶ்ரீநாப . . ஹி கெவஶ்ம் வகரஹயஜ்ஞம்ஹாநி நெதத்ஷரஷ நாநாவ . . ஸகஹ்ரிரஸ்த ஹமவாநிஜ்ஞுஷ தஸ்யாக-

8. ரொக வெளஷ்டஷ வஷ்டவிஶெஷ கொடிநிவிஐஷ உாநாவதாரெ . . வநஷ [॥*]

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 8**

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : முதலாம் குலோத்துங்கன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில், அபிஷேக மண்டபத்து எதிரிலுள்ள கோபுரத்தின் இடதுபுறச் சுவர்

குறிப்புரை : திருவத்தியூர் அருளாளப் பெருமாள் கோயில் குளத்தின் (திருப்பொய்கை) வடகரையில் அமைந்திருந்த அரிகேசுவன் மடத்தில் பிராமணர்களுக்கு உணவளிக்கும் பெரிய கோயில் மாமுனிகளிடம் ஜயங்கொண்ட சோழ மண்டலம், ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வையத்வூர் ஊரார் பதினைந்து காசுகள் பெற்றுக் கொண்டு இறை நீக்கி நிலமொன்றினை விற்றுக் கொடுத்துள்ளனர்.

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : –

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 635/1919

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண் : 8

கல்வெட்டு :

1. . . . . மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனைமன்நவர் இரியலு . . . . திக்கனைத்தும் தன்சக்கரநடாத்தி வீரஹஸிம்ஹாஸநத்து உலகுடையாளோடும் வீற்றிருஞ்சருளிய கோவிராஜகேஸரி வர்மந [சக்கரவத்தி*]

2. . . . . வியாழக்கிழமையும் பெற்ற உத்திரத்தி நாள் பகற் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஊற்றுக்காட்டு நாட்டு வையத்வூர் ஊரோம் நிலவிலையாவணக் கையெழுத்து சோழமண்டலத்து ராஜேந்ர சோழவ

3. ள நாட்டு . . . . . கோட்டத்து எயில் [நாட்டு] திருவத்தியூர் நின்றருளின அருளாளப்பெருமாள் திருப்பொய்கையில் வடகரையில் அரிகேசுவன் மடத்து ப்ரஹ்மவிதரை ஊட்டுகிற பெரியகோயில் உஹாமுநிகளுக்கு நாங்கள் விற்றுக்குடுத்த நிலமாவது கிழ . .

4. . . . . யான் பள்[ளிச்செறு]வுக்கும் . . . . . ன்பாற்கெல்லை . . . . . நிலத்துக்கு வடக்கும் இந்நிலத்து தெற்குநோக்கி வளர்ஞ நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை பள்ளித் தன்செறுவுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை யாங்களுடைய கொட்டுகால் நீர்பாயும் வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்

5. . . . . யாதும்பன் கொல்லைக்கு . . . . . க்குக் கிழக்கும் . . . பர்[கெல்லகல்லை]கிழாந் அரையன் நம்புகாளி வாமெழூரப் பெருஞ்செறுவுக்கும் யாங்களுடைய சங்கயனகழுவலுக்கும் படைச்சன் கழுவலுக்கும் வண்ணக்கன் நாரணத்தின்

6. . . . . செறுவுக்கும் . . . . . ருநான் [கெ*]ல்லை யுள்ளும் நடுவுபட்ட நிலத்தில் மு . . செய்காலாய்வருகிற நீர்நிலமும் பாழும் உட்பட்ட நிலம் ஆயிரத்தெண்பதும் நாலெ வரம்புக . . . ரையாக நிலத்தும் திருத்திப்பயிர் செய்ய

7. . . . . த்து தொண்ணுறும் எட்டு மேட்டுப் பற்றில் . . . . . றும் சஞூாதித்த நுள்ளிட்ட பயிர் செய்லாம் நிலங்குழி எழுநூற்றறுபத்தொன்பதரையும் சின் நிலத்துக்கு நீர்நிலையாகக் கல்லிநகுளமுங்காரயும் நீர்க்கோவையும் அகப்படிக்குழி அறுநூற்றுநாலும் ஆகக்குழி மூவ்வாயிரத்து

8. . . . . இறையிலியாக விற்றுக்குடுத்துக்கொழ்வதாக எம்மிலிசைவு விலைப்பொருள் அந்றாடு நற்காசு பதினைஞ்சும் இக்காசு பதினைஞ்சும் ஆவணக்களரியே கையச்செலவறக் கொண்டு அரிகேசுவன் மடத்துண்ணும் ஐஹவிதரை ஊட்டுகிற பெரியகோயில் மாமுநிக்கு விற்றுவிலை

9. . . . . கொள்ளக்கடவோமாகவும் பெரிவேரி நீர்பாயக் கடவதாகவும் ஆறுமஞ்சியும் சில்லிறை சோறுமாட்டு எப்பெர்பட்டதுஞ் சொல்லப்பெறாதோமாகவும் முக்காலாவது திருவத்தியூர் கேசுவந்மடமுட்டும் பெரியகோயில் மாமுனிகளுக்கு . . .

10. . . . . தேவனும் ஆதித்தன் திருவரங்[க]தேவனும் வணக்கன் ஏகாம்பரந் சரணனும் வண்ணக்கன் வேங்கடவந் சுப்பிரமண்ணியனும் தேசவெள்ளாளன் சஞயன் தேவனும் சீயமுழான் கம்பந்காமதேவனும் முவேஞ குழைஞ்சான் அழகிய மண

11. . . . . ற்றம்*பல முவேஅ பெஅவேளாநும் அரையன் காளி ஒப்பாதனமைக்கு ஒளிபெரியாந் காரிதுணையும் குளத்துழாந் படிக்குன்றின் ஒப்பாதநமைக்கு வண்ணக்கநாத்தித்தன் திருவரங்[க*]தேவநும் மங்கலங்கிழாந் ஸலைஜ்ஜயாநமைக்கு . . .

12. . . . . னமைக்கு வண்ணக்கன் வேங்கடவன்சுப்பிரமண்ணியநும் கூத்தருடையான் ஒற்றி ஸலைஜ்ஜயாநமைக்கு வண்ணக்கன் படம்பாக்கநாயகன் திருச்சிற்றம்பல மூவேஅ வேளாநும் ஒளிபெரியநந்தனயன் ஸலைஜ்ஜயாநமைக்கு ∴ழியவாணியன் இசக்கன் ஒற்றறியும் பிரம்பலக்

13. . . . . ப்பாதனமைக்கு வண்ணக்கநாதித்தன் திருவரங்க தேவநெழுத்து இவர்கள் பணிக்க கல்லில் எழுத்து வெட்டிநேன் திருவத்தியூர் . . ச்சன் அத்தியூரான் வடுகநாந ராஜநா . . . . . ட

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 9**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1126
ஊர்	:	காஞ்சிபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	516/1919
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
அரசன்	:	விக்கிரம சோழன்			
இடம்	:	நரசிம்மசுவாமி சன்னதி நுழைவு வாயில் இடதுபுறச் சுவர்.			
குறிப்புரை	:	திருவிந்தளூர் நாட்டு தென்கஞ்சாற்று கஞ்சாறன் வாசிஷ்டன் குமாரசுவாமி என்பவன் ஸ்ரீரங்கசாயியான விக்கிரமசோழ விண்ணகர பெருமாள் நீராட்டுவதற்கு உபயோகப்படுத்தும் பாத்திரம் (சகஸ்ரதாரை) நூற்றுத் தொண்ணூற்று ஏழரை ($197\frac{1}{2}$) கழஞ்சு பொன் அளித்துள்ளான். ஒன்பதரையே அரைக்கால் (9 5/8) மாற்றுக் கொண்ட இப்பொன்னினை கோயில் கல்லால் மாற்றுத் தன்மையை (தரத்தினை) சோதித்துள்ளனர்.			

கல்வெட்டு :

1. . . . . வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தந்நிருபதமலர மன்னவர் சூட மன்னிய உரிமையால் மணிமுடிசூடிச் செங்கோல் சென்று திசைதொறு வளர்ப வெங்கலி நிக்கி மெய்யறதைழைப்ப கலிங்கமிரிய கடமலை நடாத்தி வலங்கொளாழிவறையாழி தி . . . . . .
2. நிழற்ற விஜையஹிஷேகம் பண்ணி வீரஸிஂஹாஸநத்து முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளின . . . . . .
3. புவநச்சகூவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு எட்டாவது
4. . . . . ள நாட்டுத் திருவிஜைஞர்நாட்டு தெ[ன்]கஞ்சாற்று க[ஞ்]சாறன் வாஸிஷ்ந் கூமாரஸ்வாழி ஸ்ரீரஂஹஸ்வாயியாந விக்கிரமசோழ
5. விண்ணகர பெருமாளுக்கு இட்ட ஸஹஸ்ரதாரை ஒன்பதரையே அரைக்கால் மாறி கோயில் கல்லால்ப் பொன்நூற்றுத் தொண்ணுற்று ஏழு கழஞ்சரை ॥இ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 10**

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : விக்கிரமசோழன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறை மேற்குச் சுவர்.

குறிப்புரை : ஐயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில் நாட்டு திருவத்தியூர் ஆழ்வார் மீது பாடல்கள் பாடிய பூதத்தாழ்வாரும், பொய்கையாழ்வாரும் பிறந்த நாளான திருக்கேட்டை நாளில் மாதந்தோறும் வரும் கேட்டை நாளில் அருளாளப்பெருமாளுக்கு வழிபாடு நடத்திட தானமளிக்கப்பட்டுள்ளது. சோழமண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு வங்கமுழையூர் வெண்காடன் ஆதித்ததேவன் எனும் வங்கத்தரையன் என்பவன் இக்கோயில் பண்டாரத்தில் 780 கல நெல்லினை ஒப்படைத்து, இந்நெல்லில் இருந்து வட்டியாக ஆண்டொன்றுக்கு 390 கல நெல்லின் வாயிலாக அருளாளப்பெருமாளுக்கு வழிபாடு செய்திட வழிவகை செய்துள்ளான்.

ஆட்சி ஆண்டு : 9

வரலாற்று ஆண்டு : கி.பி. 1127

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 33/1893

முன் பதிப்பு : தெ.இ.கல்.தொ. III. கல் எண். 80

ஊர்க் கல்வெட்டு எண் : 10

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ[ll*] பூமாது புணர[ப்]புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன்நிருபதமலர் மன்னவர் சூட மன்நிய உரிமையால் மணிமுடி சூடிச்செங்கோல் சென்று திசைதொறு[ம்*] வளர்ப்ப வெங்கலி [நீ]ங்கி மெய்யற[ஞ்செ]ழப்பக் கலிங்கமீரியக்கடமலை நடாத்தி வலங்கொளாழிவரையாழி திரிய இரிசுடர[ள]வுமொருகுடை நிழற்ற விஜையசுஹிஷெகம் ப[ண்]ணி [வீ]ரஸிம்ஹாஸநத்து முக்கோக்கிழாநடிகளோடும் [வீ]ற்-

2. றிருஞருளிய கோப்பரகேசரிபந்ராந திரிஹுவநச்சுக்ரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட சோழ[ம]ண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திரு[வ]த்தியூராழ்வாரைப் பாடியருளிந ஸ்ரீபூதத்தாழ்வாரும் ஸ்ரீபொய்கையாழ்வாரும் [பி]றஞ

திருக்கேட்டை நாள் அருளாளப்பெருமாள் புறப்பட்ட[ரு]ளி ஸகலாஉஶி திருமஞ்ச[ந]மு[ம்] பெருஜிருவமுதுஞ் செய்தரு[ள]த் திரு[ம]ஞ்சநத்துக்குத் திருமுளைச்சார்[த்]த திருமு-

3. ளைப்பாலிகை முப்பத்தாறுக்குப்பாலிகை ஒன்றுக்கடிக்கீழட்ட நெல்லு உரியாக நெல்லுப்பதக்கிருநாழியும் திருமு[ளை]ப்பீதங்கொள்ள அரிசி னாநாழியும் புணூாஉஉக்ஷ[ண]ணக்கு [அ]ரிசி அறுநா[ழி] உ[ழ]க்கும் [ஐஇஊ]வூ[ஹ்ஹு]க்கு அரிசி இரு நாழி உரியும் திருமு[ளை]க்குத் தி[ரு]நஜாவிளக்குக்கு நாஎ[ள]ா[ன்]றுக்கு எண்ணை உழக்காக நாளஞ்சுக்[கு] எண்[ணை] நாழி உழ[க்]குங் கூதஹாஎாஹணத்துக்கு நெய் [மூ]வுழக்காழாக்கும் திருமஞ்-

4. சநத்துக்குக்[க]லசம் எண்பத்தொன்றுக்கு அடிக்[கீ]ழ் நெல்லு [ஐ]ங்குறுணி உரியும் கும்[ப]நாலுக்கு நெல்லு நாநாழியும் திருச்சுணண்ணக்கலசமொ[ன்]றுக்கடிக்கீழரி[சி] இருநா[ழி]யுங் கலசஞ்சூழக்காணவிலை[யின் பு]ட[வ] ப[தி]ந்மூன்றுங்கலசஞ்சுற்ற நூல[ளை]ப்பலமும் திருமஞ்சநத்துக்கு நெய் முன்னாழியும் தேநாழியும் பால் முன்-

5. னாழியு[ம்] தயிர் [முன்]னா[ழி]யும் ஸ்ஹுஉஊவ்ஙங்கள் வேண்டுவ[ந]வும் பஞ்சலோக[மு]ம் பஞ்சரத்தமும் திருச்சுணண்ணத்துக்கு நாட[ன்]மஞ்சள் நாற்பதிந் பல[மு]ம் திருவிளக்கெண்ணை உரியும் ஹொஉத்துக்கு நெ[ய்]யுரியும் சாதி அரு[ள]ச்ச[ஜ்ஜ]நமுக்க[சும்] கற்பூரமாறு [ம]ாவும் அகி[லை]ரக்க[ழ]ஞ்சுங் கஸ்தூரி ம[ஞ்]சாடியுமிரண்டு மாவு[ம்] புழுகு[நெ]ய்யிரண்டு மஞ்சாடியுநாலு மா[வும]ாத்திரைக்கரிசி நாநாழியு[ம்] ெ[ப]-

6. ருன்திருவமுதுக்கு அ[ரி]சி முக்கலனெ குறுணியும் பருப்புப்பமக்கிருநாழி உரியும் பலவற்கத்துக்கறி நிறை எண்ணூற்றிருபத்தைம்பலமு[ம்] கறியமுதுக்கு உப்பு நாநாழியுமிளகு உரியும் கடுகு ஆழாக்கே இருசெவிடரையும் சீரகமாழக்கு[ஞ்ச]ற்க[ரை]ர இருபதின் பலமும் நெய்யுரியும் அமுதில் ப[ளை]டக்க சற்கரை [மு]ப்பத்திருபலவரையும் நெய் பதிநொருநாழி ஆழாக்கும் வா-

7. [ளை]ழ[ப்]பழமைம்பத்தஞ்சும் தயிர் தூணியும் கண்டசற்க[ளை]ர முக்கசும் திருக்கண்ணாமடைக்கரிசி இருநாழியுநெய்யாழக்கும் சற்கரை இருபதின் பல[மு]ம் வாழைப்பழம் பத்தும் அப்பஅமுதுக்கரிசி பதக்கும் நெ[ய்]யிருநாழி உரியும் சற்கரை எண்பதிந்பலமு மி[ளக]ாழ[க்]கு[ம்

சீர]க[மி]ரு[ச]விடரையும் விறகு கட்டு மூ[ன்]றும் குசக்கலஉருவுக்கு நெல்லுக்கலமும் தண்ணீர் முதுக்கேலமொருசெவிடரையும் அ

8. டைக்கா[ய்]அமுதுக்கு பாக்கு நாநூற்[ை]றம்[ப]து வெற்றிலைப்பற்றொந்பதும் திரு[வி]ளக்கெண்ணை நாழி உரியும் திருவி[ள]க்குடையார்கள் குழாய் பந்நிரண்டுக்கெண்[ணை மு]ந்நாழியும் பாவைவிளக்குக்கெண்ணை இருநாழியும் ஆக இவையிற்றுக்கு நிமஞமாகச்செல்வதாக இட்ட சமவிலைப்படியாலிக்கோயில் சிலவளக்குமருமொழிநங்கை[ம]ர[க்]காலால் திருக்கேட்டை நாளொந்று

9. க்கு நெல்லு மு[ப்]பதிந் கலமாக ஓராட்டை நாளைக்கு வேண்டுவதாந நெல்லு முன்னூற்றுத்தொண்ணூற்றுக்கலத்துக்கும் சோழமண்டலத்து விரஜாதராஜஜயங்கரவளநாட்டு மண்ணிநாட்டு வங்கமுழையூர் முை[ழ]யூருடையாந் வெண்காடந் ஆதித்ததேவநாந வங்கத்தரையந் இத்தேவர் பண்டாரத்து ச்சிலவளக்கு[ம]ரு[ம]ா[ழி]நங்கைமரக்காலாலளஞ நெல்லு

10. எழுநூற்[ற]ன்பதிந் கலமிந்நெல்லெழுநூற்றெண்பதிந் கல[த்]துக்கு மாஸந்தோறும் நெல்லு முப்பத்திருகலநே தூணிப்பதக்காக யாண்டு வரை சு அரெப்பொலிசையால் பலிசை பொலிவதாந நெல்லு முன்னூற்றுத்தொண்ணூற்றுக்கலமிந்நெல்லு மு]ந்நூற்றுத்தொ[ண்]ணூற்றுக்[க]லத்துக்கும் அருளாளப்பெருமா[ள்] மாஸதோறும் திருக்கேட்டை நாள் புறப்பட்டரு[ளி]

11. திருமஞ்சநமும் பெருந்திருவமுதும் செய்தருள வேண்டுவநவையிற்றுக்கு இந்நிமஞப்படிய ப[ண்]டாரத்திலே விட்டு ஜூஷிதவதி நிமஞமாகச் செய்யக் கடவதாகச் சிலாலேகை செய்வித்துக் குடுத்தொம் இக்கோயிலில் ஸ்ரீகோயில் வாரியம் [பு]ண்ட[வ]த்தநத்து ஸாஜஸாஜகூ[ம]வித்தநும் தூதஹரி நின்றநாராயணக்கிரம வித்தநும் ஏஹஸ்ஷஅத்தூ

12. ப[ா]ண்டவதூதக்கிரமவிதநும் புண்டவத்தநத்து இளையகோக்கிரமவித்தநும் தூதஹரி [ெ]வண்ணைக்கூத்தக்கிரமவித்தநும் தூதஹரி இளையருளா[ள]க்கிரமவித்தநும் கோயிற்கணக்கு உத்திரமேலுருடையாநாந எட்டி திருக்கா[ள]த்தி உடையானும் இவ்வநைவோம் [॥*] இப்படிக்கு இ[ை]வ உத்[தி]ரமே[லு]ருடையான் எட்டி திருக்காளத்தியுடையான் எழுத்து ॥[உ]

த.நா.அ. தொல்லியல் துறை

தொடர் எண் : 11

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : விக்கிரமசோழன்

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் பாறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : வெண்குன்றக் கோட்டத்து வல்ல நாட்டு சிற்றாமூரைச் சேர்ந்த திருமார்விடங்கொண்டாரான அலங்கார வல்லி என்பவர் அருளாளப்பெருமாள் கோயிலில் திருநுந்தா விளக்கெரிக்க 96 ஆடுகள் கொடையளித்துள்ளார்.

ஆட்சி ஆண்டு : 9

வரலாற்று ஆண்டு : கி.பி. 1127

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 436/1919

முன் பதிப்பு : -

ஊர்க் கல்வெட்டு எண் : 11

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [ll*] பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தந்நிருபதுமலர் மந்நவர் சூட மந்நிய உரிமையா-

2. ல் மணிமுடிசூடிச் செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறஞழைப்பக் கலிங்மிரியக்கடமலை

3. நடாத்தி வலங்கொளாழிவரையாழி திரிய இரிசுடரளவும் ஒருகுடை நிழற்ற விஜை சுஹிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து முக்கோ

4. க்கிழாநடிகளோடும் வீற்றிருஞருளிய கோப்பரகேசரிவர்ரநாந தி்புவந[ச்ச]க்ரவத்தி ஸ்ரீவிக்கிரமசோழதேவ[ர்]க்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட

5. சோழமண்டலத்து எயிற்கொட்டத்து எயில்நாட்டுத் திருஅத்தியூர் நின்றருளிந அருளாளப்பெருமாளுக்கு வெண்குந்றக் கோட்டத்து வல்லநாட்டுச் சி[ற்]

6. றாமூர் தி . . த்திருமார்விடங்கொண்டாராந அலங்காரவல்லி வைத்த திருநுஞாவிளக்கு ஒன்றுக்கு வைத்த ஆடு தொண்ணூறும் இவ்வாடு தொண்ணூ

7. ற்றில் திருஅத்தியூரடையன் வெம்பளப்ப(ப)நாந திருவாய்ப்பாடிக்கோன் விளக்கு
காலும் வெண்ணை உமிய்நாதந்[த்] திருவரங்கக்கோன் விளக்குக்காலு

8. ம் செல்வனப்பநாந ராஜநாராயணக்கோன் விளக்குக்காலும் சாத்தந்செல்வநாந
வெண்ணைக்கூத்தக்கோன் விளக்குக்காலும் ஆக விளக்கொன்றும் திருக்கா

9. ர்திகைக்கு கொண்ட ஆடு ஆறுக்கு நெய்அறுநாழியும் சந்திராதித்தவற்
நித்தம் உழக்குநெய் திருநாராயணத்தால் அளப்பார்களாகவும் இப்படிஇவ

10. ர்கள் முன்பு நில்லாது ஒளித்துப்போகிலும் இத்தன்மமுட்டாமே நெய்யளக்க
கடவோமாநோம் குழைந்தான் பள்ளிகொண்டான் செந்தாமரை–

11. க்கண்ணநும் இவ்விருவோம் இப்படிக்கிவை கோயிற்கணக்கு உத்திர
மேலாருடையானாந எட்டி திருக்காளத்தியுடையாநெழுத்து ॥ஒ

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 12**

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : விக்கிரமசோழன்

ஆட்சி ஆண்டு : 10

வரலாற்று ஆண்டு : கி.பி. 1128

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : 518/1919

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 12

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னதி உட்புற வலதுபுறச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு முழுமை பெறாமல் உள்ளது. விக்கிரம சோழனின் 10–ஆவது ஆட்சியாண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ[ll*] ஜெயங்கொண்ட சோழமண்டலத்து [எயிற்கோட்ட]
2. த்து [எயில்]நாட்டு திரு அத்தியூராழ்வாற்கு . . . . . உள்ளிட்ட . . . . .
3. . . . இறுப்பதாக சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவற்கு யாண்டு ம ஆவ

த.நா.அரசு தொல்லியல் துறை **தொடர் எண் : 13**

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : விக்கிரம சோழன்

ஆட்சி ஆண்டு : 10

வரலாற்று ஆண்டு : கி.பி. 1128

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : 520/1919

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 13

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் நரசிம்மசுவாமி சன்னதி உட்புற இடதுபுறச் சுவர்.

குறிப்புரை : ஆமூர்க் கோட்டத்து குமிழி நாட்டு தையூரான இராசகேசரிநல்லூரில் நடுவிற்பாடியில் உள்ள உப்பளம் ஒன்றும், நிலம் ஒன்றும் தானமளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்ப தன்நிரு பத

2. மலர் மன்னவர் சூட மன்னிய உரிமையால் மணிமுடி சூடி செங்கொல் [சென்று திசை]தொறும்

3. வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்ப கலிங்கம் மி[ரியகடமலை நடாத்தி வ]லங்கொ

4. ளாழி வரையாழி திரிய இருசுடரளவு மொருகுடை நிழற்ற விஜைசுஹிஷேகம் பண்ணி வீரஸிங்ஹாஸன

5. த்து முக்கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிபந்ஃரான திரிஹ ுவநசக்கரவத்திகள் ஸ்ரீவி

6. க்கிரம சோழ தேவற்கு யாண்டு ௩ ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்ட

7. த்து எயில் நாட்டு திருஅத்தியூராழ்வாற்கு உப்பமுதுள்ளி[ட்ட வெஞ்சன]ங்களுக்கு இறுப்பதாக தி

8. ருவாய்மொழிந்தருளி தேவதானமாக இட செயகுன்றக்கிழ[வனும் புர]வுவரி திணைக்களநாயக

9. ம் வெண்ணைநல்லூருடையானும் பெருமூர் கிழவனும் இலுப்பையூர் கிழவனும் வடு[வூ]ருடையானு

10. ம் முகவெட்டி தெங்கூருடையானு மாப்புதங்கிழவனு மணலூர் கிழவனும் எழுத்திட்ட

11. உள்வரிப்படி பொத்தகத்தில் சேர்த்து [ஊர்]முதலில் மாட்[டெறி]ந்தபடிக்கு உள்வரி ஆமூற்

12. கோட்டத்து குமிழி நாட்டு தையூரான இராஜகேசரிநல்லூரில் நடுவிற்பாடியில் வட

13. க்கடை[ய] பன்னீரடிக்கோலால் குழி நானூற்றினால் அளம் ஒன்றும் இந்த அளத்துக்கு திரு

14. [இ]டவந்தையாழ்வார் மடபுறவாய்க்காலுக்கு தெற்கு பன்னீரடிக்கோல[ால் வி]ளைநிலம்

15. ஒன்றேகால்வேலியும் யாண்டு ௩ ஆவது முதல் தேவதானமான இட்டமைக்கு இை

16. வ வரிப்பொத்தகநாயகம் சிலமாங்காடுகிழானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து மு

17. கவெட்டி அரிசிபாக்கமுடையானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி

18. ஐயண்டம்பாக்கிழானெழுத்து இவை புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி அளகுழானெ

19. ழுத்து [॥*]

த.நா.அ.தொல்லியல்துறை

தொடர் எண்:- 14

மாவட்டம் : காஞ்சிபுரம்

வட்டம் : காஞ்சிபுரம்

ஊர் : காஞ்சிபுரம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

அரசன் : விக்கிரமசோழன்

ஆட்சி ஆண்டு : 11

வரலாற்று ஆண்டு : கி.பி. 1129

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 590/1919

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு எண் : 14

இடம் : அருளாளப்பெருமாள் கோயில் இரண்டாம் திருச்சுற்றிலுள்ள கருமாணிக்க வரதர் சன்னதி உட்புறம்

